# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

## Case No:STC.1471/2022

## Prosecution Witnesses : 1

| | | | |
|---|---|---|---|
| Name | :Lakshmanan | Caste | : |
| Father 's Name | : Sundaram | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. அவர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**24.04.2025**

**முதல் விசாரணை**

நான் கே.வெள்ளாகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். எதிரி திரவியத்தை எனக்கு தெரியும். அவர் தான் என்னுடன் சண்டைபோட்டவர் ஆவார். தற்போது நான் அவருடன் சமாதானம் ஆகிவிட்டேன். மேல் நடவடிக்கை அவர் மீது எடுக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன். நான் 2020 வது வருடம் எதிரி மீது இருந்த மனகசப்பின் காரணமாக அவர் மீது மிகைப்படுத்தி புகார் கொடுத்துவிட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான்.அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் கு.வி**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 20.11.2020 அன்று 12.30 மணிக்கு நானும் சாட்சிகள் அண்ணராஜ் மற்றும் பிச்சை முத்து ஆகியோர்கள் எங்கள் ஊர் அருகே உள்ள காளியம்மன் கோவில் அருகே இருந்த போது இந்த வழக்கின் எதிரி ஏற்கனவே எங்களுக்குள் இருந்த வரைபட அனுமதி சம்பந்தமாக முன்பகையை மனதில் வைத்துக்கொண்டு என்னை பார்த்து அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் விடுத்தார்

என நான் கொடுத்த புகாரிலும் போலிசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி,இல்லை**